**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 2 of 2025

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : பொன்னுசாமி

Father's Name : சென்னிமலை கவுண்டர்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th **day of April** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் திருப்பூர் மாவட்டம் தாராபுரத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். செல்லமுத்து மற்றும் ராமாத்தாள் இருவரையும் எனக்கு தெரியும், இருவரும் எனக்கு சித்தப்பா மற்றும் சித்தி முறையாகும். தேதி மாதம் மற்றும் வருடம் ஞாபகம் இல்லை சுமார் பத்து வருடங்களுக்கு முன்பாக நாங்கள் எங்கள் வீட்டில் இருந்து திருமணத்திற்கு செல்வதற்காக செல்லமுத்து மற்றும் ராமாத்தாள் இருவரும் எங்களை அழைத்தார்கள். நாங்கள் அவர்களை முன்பாக செல்லுங்கள் நாங்கள் பின்பாக வருகிறோம் எனச் சொல்லி அனுப்பி வைத்தேன் அவர்கள் அனுப்பி வைத்த சுமார் 45 நிமிடத்திற்குள் எங்களுக்கு எனது சித்தப்பா மற்றும் சித்திக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், எங்களை உடனடியாக வருமாறும் அழைத்தார்கள். நாங்களும் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றோம். நான் சம்பவ இடம் சென்று பார்த்த பொழுது

எனது சித்தப்பா டூரிஸ்ட் பேருந்தில் முன் வலதுபுற டயரின் கீழ் அடிபட்ட நிலையில் இறந்து இருந்தார். எனது சித்தியை பார்த்தபொழுது பேருந்து மோதி தூக்கி எறியப்பட்டு இருந்தார். அவரும் சம்பவ இடத்திலேயே இறந்த நிலையில் இருந்தார்.

2. பின்னர் நான் விபத்து குறித்து என்னுடைய வழக்கறிஞர் பாலு அவர்களுக்கு தகவல் சொல்லி அவரும் சம்பவ இடம் வந்து விட்டார் பின்னர் நாங்கள் அனைவரும் சேர்ந்து காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். சம்பவ இடத்திலிருந்து எனது சித்தப்பா மற்றும் சித்தியின் உடல்களை ஆம்புலன்ஸ் மூலமாக பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். என்னிடம் கட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டவைதான். புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் எனது சித்தப்பா மற்றும் சித்தியின் உடலின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடன் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். மேற்படி சம்பவத்தில் சம்பந்தப்பட்ட டூரிஸ்ட் பஸ்ஸில் பதிவு எண் தற்பொழுது 10 வருடங்கள் ஆகிவிட்டதால் நினைவில்லை. மேலும் பேருந்தின் ஓட்டுனர் பெயர் யார் என அங்கிருந்தவர்களிடம் கேட்டு அழகர்சாமி என தெரிந்து கொண்டேன். அவர் சம்பவ இடத்தில் அங்கு இல்லை. சம்பவம் நடந்த பின்புதான் அவரைப் பார்த்தேன்.

**(சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டு சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 04.11.2016ம் தேதி காலை சுமார் 06:45 மணி அளவில் திருமணத்திற்கு செல்வதற்காக நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த ஈஸ்வரன் என்பவரும் நின்று கொண்டு இருந்தோம் என்றும், அப்பொழுது அவ்வழியாக எனது சித்தப்பா செல்லமுத்து மற்றும் எனது சித்தி இருவரும் இருசக்கர வாகனத்தில் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மெதுவாக வந்து மேற்கு நோக்கி திரும்புவதற்காக இண்டிகேட்டர் போட்டு சைகை காட்டி திரும்பிக் கொண்டிருந்தார்கள் என்றும் அப்பொழுது அதே ரோட்டில் அவர்களுக்கு பின்னால் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த டிராவல்ஸ்பஸ்ஸை எதிரி அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எங்கள் சித்தப்பா மற்றும் சித்தி மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் விபத்து சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, விபத்து குறித்து 45 நிமிடங்கள் கழித்து தனக்கு தகவல் சொன்னார்கள் என்றும்,

தான் சம்பவ இடம் சென்று பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

**Sd./-T.Arunkumar**
**Judicial Magistrate,**
**Sulur.**